# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 253/2023

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 13ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. புவனேஸ்வரி | | |
| க/பெ. | பிரிதிவிராஜன் | வட்டம் | கும்மிடிப்பூண்டி |
| கிராமம் | மல்லியங்குப்பம் | வயது | 37 |
| தொழில் | ஓய்வு | மாவட்டம் | திருவள்ளூர் |

**முதல் விசாரணை**

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்டது அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 17வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | வாகன பதிவு சான்று நகல் |
| ம.சா.ஆ 3 | வாகன காப்பீட்டு சான்று நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 4 | வாகன ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பு 1 அசல் |
| ம.சா.ஆ 6 | விபத்து பதிவேடு நகல் |
| ம.சா.ஆ 7 | மருத்துவ விடுவிப்பு 2 அசல் |
| ம.சா.ஆ 8 | இயலாமை சான்று நகல் |
| ம.சா.ஆ 9 | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ 10 | இயலாமை அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ 11 | கதிரியக்கப்படம் அசல் |
| ம.சா.ஆ 12 | ஸ்கேன் அசல் |
| ம.சா.ஆ 13 | கல்லூரி மாற்றுச்சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ 14 | மனுதாரரின் புகைப்படம் அசல் |
| ம.சா.ஆ 15 | மருத்துவ செலவு ரசீது அசல் |
| ம.சா.ஆ 16 | தொடர் சிகிச்சை ஆவணம் அசல் |
| ம.சா.ஆ 17 | குற்ற அறிக்கை நகல் |
| நி.ம.சா.ஆ 1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

09.03.2023 அன்று பெருவாயில் பஞ்சாயத்து அலுவலகம் எதிரே நான் எனது இருசக்கர வாகனத்தில் காலை 8.35 மணியளவில் எனது குழந்தையை பள்ளிக்கு அழைத்துச் சென்ற போது எனது சகோதரர் இரு சக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் நான் மற்றும் எனது 6 வயது மகள் அமர்ந்து கொண்டு வந்த போது AP–16–TH–3445 என்ற பதிவு எண் கொண்ட லாரி நாங்கள் அமர்ந்து சென்ற வாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணிந்திருந்தேன். லாரியின் பதிவு எண் 3445. முதலில் பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர்

சௌந்தர் பாண்டியன் மருத்துவமனையில் 9 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். தற்போது வார வாரம் சென்று சிகிச்சை பெறுகிறேன். விபத்தில் பின் தலை, வலது கால் முட்டிக்கு கீழ் மற்றும் இடுப்பு பகுதியில் காயம் ஏற்பட்டது. வலது கால் முட்டிக்கு கீழ் அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிட்டார்கள். நான் ரூ.30,00,000/– இழப்பீடு கேட்டுள்ளேன். விபத்து சமயத்தில் நான் தற்காலிக ஆசிரியராக பணிப்புரிந்து மாதம் ரூ.15,000/– சம்பாதித்தேன். தற்போது வேலைக்கு செல்லவில்லை. விபத்து சமயத்தில நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 8, 10 ஆவணங்களை நான் முறையாக பெற்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவ காப்பீட்டின் மூலமாகதான் சிகிச்சைக்கு செலவு செய்தேன் என்றால் சரியல்ல. எனது வயது வருமானம் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி